கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்

அ.வ.எண்.**222/2024**

நாள் : 10.02.2026

வா.சா.1 – வீராச்சாமி

பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை

இந்த வழக்கு உங்களால் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் - என்னுடைய தாத்தா வழி சொத்து என்பதனால் எனக்கு வேண்டும் என்று இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள தபசில் சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 240/1 ஆகும். அந்த தபசில் சொத்தின் விஸ்தீரணம் என்ன என்று உங்களுக்கு தெரியுமா என்றால் - தெரியும், 2 ஏக்கர் ஆகும். அந்த சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் - எனது தாத்தா பெருமாள்நாயக்கருக்கு பாத்தியப்பட்டது. அந்த சொத்து உங்கள் பெருமாள்நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்பதனை நிருபணம் செய்யும் விதமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் - பாகவிஸ்தி பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் எதுவரை படித்துள்ளீர்கள் என்றால் - 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். உங்களுக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் - தெரியும். உங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பாகவிஸ்தி பத்திரமான வா.சா.ஆ.3 என்றுசொன்னால் - சரிதான். அதில் உங்கள் தாத்தா பெருமாள்நாயக்கருக்கு பாத்தியப்பட்ட சொத்து எந்த இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றுசொன்னால் - சாட்சிக்கு மூன்றுமாதத்திற்கு முன்னர்தான் கண்புரை

அறுவைசிகிச்சை செய்யப்பட்டதால் அவரது மூக்குகண்ணாடியை அணிந்து சாட்சி சொல்லும்பொருட்டு குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**